# சமுதாய வள பயிற்றுநர் தேர்வு செய்தல்
## பத்திரிக்கை செய்தி

மயிலாடுதுறை மாவட்டம் 2025 – 2026 ஆம் ஆண்டு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் சமுதாய மேலாண்மை பயிற்சி மையத்தில் (CMTC) காலியாக உள்ள சமுதாய வளப் பயிற்றுநர் பணியிடங்களுக்கு பணியாளராக பணி அமர்வு செய்திட தகுதியான சுய உதவிக்குழு பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணபங்கள் www.mayiladuthurai.nic.in என்ற வலைதள முகவரியிலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்பு 11.09.2025 முதல் 17.09.2025 வரை மாலை 05.45 மணிக்குள் வந்து சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும்.

**சிறந்த பயிற்றுநருக்கான தன்மைகள் :**

| வ.எண் | விவரம் | |
|---|---|---|
| 1 | தகவல் தேடுதல் | நடத்தக்கூடிய பயிற்சிக்குத் தேவையான தகவல்கள் சேகரிப்பவராகவும், கிடைக்கும் வாய்ப்புகளைத் தேடிச் செல்பவராக இருக்க வேண்டும். |
| 2 | தகவல் சேகரித்தல் (Collection of Information) | பயிற்சிக்குத் தேவையான அனைத்து வகையான தகவல்களையும் சேகரித்து வைத்திருக்க வேண்டும். |
| 3 | புதிய தகவல்கள் சேர்த்தல் (Updation) | காலத்திற்கு ஏற்ப நாள்தோறும் புதிய தகவல்களைத் தேடி சேகரிக்க வேண்டும். |
| 4 | தகவல்கள் தொகுத்தல் (Consolidation of Information) | தகவல்களை விரல் நுனியில் வைத்திருப்பதோடு, கேட்கும் தகவல்களைத் திணறலின்றிச் சொல்பவராக இருக்க வேண்டும். |

**சமுதாய வள பயிற்றுநர்களுக்கான தகுதிகள் :**

- குறைந்தபட்சம் 21 வயது பூர்த்தியடைந்து இருத்தல் வேண்டும். அதிகபட்ச வயது வரம்பு இல்லை. பயிற்சி நடத்துவதற்கு தேவையான உடற்தகுதி மற்றும் திறன் இருத்தல் மட்டும் போதுமானது.
- சுய உதவிக்குழுவில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் உறுப்பினராக இருந்திருக்க வேண்டும்
- மாவட்ட, வட்டார மற்றும் ஊராட்சி அளவிலான பயிற்சிகளில் குறைந்தது 5 முதல் 10 பயிற்சிகளிலாவது கலந்து கொண்டிருக்க வேண்டும்.
- கைபேசி செயலிகளை பயன்படுத்த தெரிந்தவராக இருத்தல் வேுண்டும்
- சமுதாய வளப் பயிற்றுநராக விண்ணப்பிக்கும் போது அவர் சார்ந்த சுய உதவிக் குழு வாராக்கடன் நிலை இல்லாது இருக்க வேண்டும்.
- சமுதாய வள பயிற்றுநராக செயல்படுவதற்கு குடும்ப ஒத்துழைப்பு இருத்தல் வேண்டும்.
- அரசியலில் முக்கிய பொறுப்பில் இல்லாதவராகவும் தனியார் நிறுவனங்களில் முழு நேரமாகவோ (அ) பகுதி நேரமாகவோ பணிபுரிபவராகவோ இருக்கக்கூடாது.
- விண்ணப்பதாரர், தொடர்புடைய குழுவிலிருந்து சமுதாய வளப்பயிற்றுநராக பரிந்துரைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றி, அத்தீர்மான நகலை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். (சமுதாய **வளப் பயிற்றுநர் மாதிரி விண்ணப்பபடிவம் : இணைப்பு** : 1)
- பயிற்சி நடைபெறும் போது மட்டும் பயிற்சி நடத்தியதற்கான மதிப்பூதியம் வழங்கப்படும்.
- மாதாந்திர மதிப்பூதியம் வழங்கப்படாது.

தகுதிவாயய்ந்த விண்ணப்பதார்களுக்கு எழுத்து தேர்வு மற்றும் நேர்காணல் நடைபெறும். நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது.

இணைப்பு : மாதிரி படிவம் - 1.

தொடர்புக்கு :

1. மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, மயிலாடுதுறை மாவட்டம்
2. உதவி திட்ட அலுவலர் (ஐஉ ரூ ஊஉ), தொலைபேசி எண் - 9976126870
3. வட்டார இயக்க மேலாளர் - மயிலாடுதுறை வட்டாரம் - 7094112785
4. வட்டார இயக்க மேலாளர் - குத்தாலம் வட்டாரம் - 9786283829
5. வட்டார இயக்க மேலாளர் - செம்பனார்கோவில் வட்டாரம் - 6369267512
6. வட்டார இயக்க மேலாளர் - சீர்காழி வட்டாரம் - 9786386722
7. வட்டார இயக்க மேலாளர் - கொள்ளிடம் வட்டாரம் - 9626487790.

10/9

மாவட்ட ஆட்சித்தலைவர்,
மயிலாடுதுறை மாவட்டம்.

இணைப்பு-1

## சமுதாய வளப் பயிற்றுநர் - மாதிரி விண்ணப்ப படிவம்

புகைப்படம்

1. பெயர் :
2. மாவட்டம் :
3. வட்டாரம் :
4. ஊராட்சி :
5. வயது :……நாள் / …மாதம் / …வருடம்
6. பாலினம் :
7. தந்தை / கணவர் பெயர் :
8. தொடர்பு முகவரி :
9. கைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி :
10. மொழித்திறன் :

| மொழி | படிக்க | எழுத | பேச |
|---|---|---|---|
| தமிழ் | | | |
| ஆங்கிலம் | | | |
| பிற மொழி | | | |

11. கல்வித் தகுதி :

| வ.எண் | கல்வித் தகுதி | நிறுவனத்தின் பெயர் | தேர்ச்சி ஆண்டு |
|---|---|---|---|
| | | | |

13. கணிணி அனுபவம் உள்ளதா : ஆம் / இல்லை

14. பணி அனுபவம் (பகுதிநேர வேலை உள்பட) :

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பதவி | ஆண்டு | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரை |
| | | | | |
| | | | | |

16. குழுவின் பெயர் : ………………………… இணைந்த தேதி : …………………

அ) SHG / PLF-ல் பொறுப்பில் இருந்த அனுபவம் உள்ளதா : ஆம் / இல்லை

ஆ) ஆம், எனில் அதன் விவரம் :

| SHG / PLF | வருடம் | வகித்த பதவி |
|---|---|---|
| | | |
| | | |

17. மகளிர் திட்டத்தின் மூலம் பயிற்சி பங்கு பெற்றவரா ? : ஆம் எனில்

| வ.எண் | பயிற்சியின் பெயர் | பயிற்சி நடைபெற்ற ஆண்டு |
|---|---|---|
| | | |
| | | |

## உறுதிமொழி

நான் மேற்கண்ட ஊராட்சியில் வசித்து வருவதுடன் மேற்கண்ட தகவல் அனைத்தும் உண்மை என்றும் சுய உறுதிச் சான்று அளிக்கிறேன்.

இணைப்பு 1. கல்விச் சான்று நகல்

2. தொடர்புடைய குழுவின் பரிந்துரை தீர்மான நகல்

கையொப்பம்

நாள் :